DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 69/2019** |
| Deposition of Witness for | : | PW7 |
| Name | : | திரு. மணிராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 07.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 7th **July** 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கடையநல்லூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த போது, கடந்த 21.06.2015 ம் தேதி 14.00 மணிக்கு கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது எட்டிசேரி தென்மலை ரோடு, ஐஸ்வர்யா நகர், ராமர் மகன் காளியப்பன் என்பவர் காவல்நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகார் மனுவை

பெற்று காவல்நிலையக்குற்ற எண்.187/2015 ச/பி.454 ,380 IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். பின்னர் அதன் அசல் மற்றும் புகார் மனுவை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரியான சிறப்பு உதவி ஆய்வாளர் பால்துரை அவர்களின் பார்வைக்கும் வைத்தேன். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக சிறப்பு உதவி ஆய்வாளர் பால்துரை, என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் சொன்ன நாள், நேரத்தில், LW–1–ம் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கையை பதில் செய்வதாக சொல்வது உண்மை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. LW–1 கொடுத்த பொய்யான புகாரினை பெற்று அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.